# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
மார்கழி 5
முஹறம் 19
புதன் (20-12-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 58
விலை சதம் 35




**"தமிழர்களை யாரும் துன்புறுத்த அனுமதியோம்"**
—யூ.என்.பி. மாநாட்டில் ஜே. ஆர்.

# வசாவிளானில் இராணுவ வெறியர்கள் அராஜகம்! கடைகளுக்குத் தீ; பொருட்கள் களவாடல்!

## பொலிசார் பார்த்து நிற்க நடந்த மிலேச்சத்தனம் மூன்று முஸ்லிம்கள் தாக்கப்பட்டுப் படுகாயம்!

**''தமிழர்களை யாரும் துன்புறுத்த அனுமதியோம்'' என்று யூ. என். பி. மாநாட்டில் ஜே. ஆர். பேசிய அதேசமயம் வடபகுதியில் அவரது இராணுவம் அப்பாவித் தமிழர்களைத் துன்புறுத்தியுள்ளது.**

தமிழ்ஈழத்தில் ஆயுதப்படைகளின் வெறியாட்டமும், அராஜகமும் அதிகரித்துள்ளன. கைப்பற்றிய பிரதேசத்தில் வெறியாட்டம் நடத்துவதுபோன்று (Army of occupation) வடபகுதியில் இராணுவத்தினர் மக்களை இம்சைப்படுத்துகின்றனர். காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள வசாவிளானிலும் இவ்வாறன வெறியாட்டம் ஒன்று 16-12-78 சனிக்கிழமை இரவு நடைபெற்றுள்ளது.

அன்று இரவு எட்டுமணியளவில் அவ்வழியால் ஜீப்பில் வந்த இராணுவத்தினர் வசாவிளான் சந்தியிலுள்ள கடையொன்றில் பெருந்தொகையான சிகரெட் பைக்கற்றுக்களை இலவசமாகத் தருமாறு கோரியிருக்கின்றனர். இதற்கு கடைச் சொந்தக்காரர் மறுத்திருக்கிறார். (இதற்கு முன் ஒன்று இரண்டு சிகரெட்டுக்களை இராணுவத்தினர் அக்கடையில் கப்பமாக பெற்றுக் கொள்வது வழக்கமாம்.) இதனால் இராணுவத்தினர் ஆத்திரமடைந்து கடைக்காரரைத் திட்டிவிட்டு அங்கிருந்து புறப்படும்போது அவ்வழியில், சங்கானையிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு வான்ஒன்று வந்து கொண்டிருந்தது. அந்த வானை காரணமெதுவுமின்றி மறித்து, அதில் பிரயாணம் செய்த பொதுமக்களைத்தாக்கியதுடன், அதில் பிரயாணம்செய்த தமிழ்ப்பெண்களின் சேலைகளை உரிந்து மானபங்கப் படுத்தியுள்ளனர்.

இதன்பிறகு இரவு 11மணி அளவில் வசாவிளான் சந்திக்கு பெருந்தொகையாக வந்த இராணுவத்தினர் தெருவின் இருபுறமும் யாரும் நுழையாதபடிதடை செய்துவிட்டு சந்தியில் இருந்த கடைகள் அனைத்தையும் அடித்து உடைத்து அங்கிருந்த பொருட்களையும்.பணத்தையும் கொள்ளையடித்ததுடன், கடைகளுக்குத் தீ வைத்துள்ளனர். இதனால் அங்கிருந்த ஏழு கடைகளும் தீப்பிடித்துஎரிந்தன. மிலிட்டரி பொலிசார் அமைதியாகப் பார்த்துக்கொண்டு நிற்கவே இந்தக் கொடுமை நிகழ்ந்துள்ளது.

இராணுவத்தினர் தாக்கியதில் வசாவிளான் சந்தியில் தையற்கடை வைத்திருந்த மூன்று முஸ்லிம்கள் படுகாயமடைந்து மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொதுமக்கள் உடனடியாக பொலிசாரிடம் சென்று புகார் செய்தபோது, அவர்கள் உடனடியாகத் தம்மால் வரமுடியாதென்றும் மறுநாளே வரமுடியுமென்றும் கூறிவிட்டார்களாம்.

—4-ம் பக்கம் பார்க்க

## கல்வியமைச்சர் பொய்சொன்னார்!

''இலங்கையின் அரசியலமைப்பில் புத்தமதத்துக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறதே— அது உண்மைதானு என்று பாரிஸில் (யூனெஸ்கோ மாநாட்டில்) சிலர் என்னிடம் கேட்டனர். அப்படி ஒரு பாகுபாடு இல்லையென்று தகுந்த ஆதாரங்களுடன் விளக்கம் கொடுத்தேன். அவர்கள் அதை ஏற்றுக் கொண்டனர்.

—கல்வியமைச்சர் நிசங்கா விஜயரத்தின
(தினபதி 14-12-78)

புத்தமதத்துக்கு அரசியல் சட்டத்தில் தரப்பட்டுள்ள இடம் இதோ:

The Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka—

Chapter II
Buddhism

(9) The Republic of Sri Lanka shall give to Buddhism the foremost place and accordingly it shall be the duty of the State to protect and foster the Buddha Sasana, while assuring to all religions the rights granted by Articles 10 and 14(1) (E).

புத்த மதத்துக்கு மேற்கண்டவாறு அரசியலமைப்பில் தரப்பட்டுள்ள முக்கியத்துவம் இலங்கையின் ஏனைய மதங்களான இந்து, இஸ்லாமிய, கிறித்தவ மதங்களுக்கு அரசியலமைப்பில் தரப்படவேயில்லை.

இதைக்கல்வியமைச்சர் மறுக்க முடியுமா? உலகை எத்தனை நாளைக்கு இவர்களால் ஏமாற்ற முடியும்!

## சிங்களவன் உயிர்தான் பெரிதா?

அண்மையில் திருநெல்வேலி வங்கிக்கொள்ளையின் போது இருபொலிசார் சுட்டுக்கொல்லப்பட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். ஒருவர் சச்சிதானந்தம் என்றபெயருடைய தமிழர்; மற்றவர் கிங்ஸ்லி பெரேரா என்ற சிங்களவர். ஆனால் யாழ்ப்பாணத்தில் ஓடும் பொலீஸ் ஜீப்புக்களிலே கிங்ஸ்லி பெரேரா என்ற சிங்கள பொலீஸ்காரரைப்பற்றியே அவரதுபடத்துடன் நினைவுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன. பாவம் சச்சிதானந்தம், அவரைப் பொலிசார் கௌரவிப்பதாகக் காணோம். சிங்களப் பொலிஸ்காரனின் உயிர்தான் அவர்களுக்குப்பெரிதாகப்படுகிறது. பொலீஸ் படையில் வேலைசெய்யும் தமிழனுக்கிருக்கும் மரியாதையின் இலட்சனத்தை இச்சம்பவம்எடுத்துக்காட்டுகிறது.

## தமிழ் பகுதிகளில் மட்டும் ஏன் துன்புறுத்தல்

15.12.78 திகதியில் வெளியான ஈழநாடு பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள ஒரு செய்திப்படி இதுவரை சிங்கள நாட்டில் மொத்தம் 21 வங்கிகளில் 13,46,617 ரூபா கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது; தமிழ் பிரதேசங்களில் மொத்தம் 7 வங்கியில் 16,38,036 ரூபா கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது.

ஆனல், இதற்காகச் சிங்களப் பிரதேசங்களில் எந்த ஒருவங்கியும் இழுத்து மூடப்பட்டதாகவோ, சிங்கள மக்கள்இக்கொள்ளைகளைப்பிடித்துக் கொடுக்கவில்லை யென்பதற்காக அவர்கள் பழி வாங்கப்பட்டதாவோ நாம் கேள்விப்பட வில்லை. இக்கொள்ளைகள் நடைபெற்ற இடங்களில் இராணுவமும், கடற்படையும் அனுப்பப்பட்டதாகவும் செய்திவெளி வந்ததில்லை.

ஆனல் தமிழ் பிரதேசங்களில் மட்டும் 45 வங்கிகள் உடனடியாக மூடப்பட்டு— மக்களின் வசதி வாய்ப்புக்கள் பறிக்கப்பட்டுள்ளன. யாரோகொள்ளையடிப்பதற்தற்காக சாதாரண மக்களின் வசதி வாய்ப்புக்கள் பறிக்கப்பட்டு, அவர்கள்பழி வாங்கப்படுகின்றனர். இராணுவத்தினரதும், கடற்படையினரினதும் கெடுபிடி அதிகரிக்கப்பட்டுள்ளது,

சிங்களப் பிரதேசங்களில் இல்லாத கெடுபிடி— தமிழ் பிரதேசங்களில்மட்டும்ஏன்? இதுதான் தார்மீகமா?

சிங்களவர்கள் ஆளும்இனமாகவும், நாம் ஆளப்படும் அடிமை இனமாகவும் இருப்பதே இதற்கு காரணம் என்பது புரிகிறதல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான முயற்சி; அமைதிவழிக் கிளர்ச்சி;

# இறுதி வழியாகப் போராட்டம்!

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாதையை அமிர்தலிங்கம் விளக்குகிறார்!

## நியூயார்க்கில் செய்தியாளருக்குச் செவ்வி

தமிழர் விடுதலைக் கூட்டணி தனது இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காக ஓர் ஆயுதப் போராட்டத்துக்குத் தன்னைத் தயார்படுத்தி வருவதாகக் கூறப்படுவதை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் திட்டவட்டமாக மறுத்தார்.

''நான் ஆயுதப்போராட்டமென்று கூறவில்லை: நான் 'போராட்டம்' என்று மட்டுமே கூறினேன்; பேச்சுவார்த்தை முதலாவது கட்டம்; இரண்டாவது அமைதியான கிளர்ச்சி: மூன்றாவதாக வேறு வகையான போராட்டங்கள்''

டெயிலிநியூஸ் சார்பில் திரு. அமிர்தலிங்கத்திடம் பேட்டி கண்டபோது, 'போராட்டம்' என்பதற்கு அவரது கருத்து என்ன என்பதை தெளிவுபடுத்துமாறு வற்புறுத்தப்பட்டது. இதற்குப் பதிலளிக்க திரு.அமிர்தலிங்கம் மறுத்து விட்டார். ''நாம் இப்போதே அதை விபரிக்க முடியாது; அப்படி விபரிப்பது காலத்துக்கு முந்தியதாகி விடும். நாம் முன்னேறிச் செல்லும் போது ஒவ்வொரு அடியையும் சிந்தித்தே வைப்போம்''

திரு. அமிர்தலிங்கம் வாஷிங்டனுக்கு சென்றிருந்த போது, சிறீலங்காவுக்கு அமெரிக்க உதவி வழங்குவதை அவர் எதிர்த்ததாக கூறப்படும் வதந்தி பற்றி, அவரிடம் கேட்ட போது அவர் பின்வருமாறு கூறினார்.

''சிறீலங்காவுக்கு உதவி வழங்கக் கூடாதென்று நான் அங்கு கூறவில்லை; வழங்கப்படும் உதவிகளை எம்மை அழிப்பதற்கு பயன்படுத்தாமல் (சிறீலங்கா)அரசாங்கத்தின் மீது உதவிவழங்கும் நாடுகள் ஒரு நெருக்கடியை ஏற்படுத்தவேண்டுமென்று தான் நான்கோரிக்கைவிடுத்தேன். எங்கள் பிரதேசத்தின் பூகோள—அமைப்பின் தனித்தன்மை மாறுபாடடையாமல் அவர்கள் தமது அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்த வேண்டுமென்று சொன்னேன்.

அமெரிக்க ராஜாங்கஇலாகாவின் அழைப்பின் பேரில், அமெரிக்கா வந்திருந்ததிரு. அமிர்தலிங்கம், நியூயோர்க்கில்' உள்ள ஒரு ஹோட்டலில் வைத்து 45நிமிடநேரம் பேட்டி யளித்தார். அவரது பேட்டிடேப்செய்யப்பட்டது. இந்தப் பேட்டியின் போது, தமிழர் இலட்சியத்துக்கு வெளிநாட்டுதவி, இந்தியப் பத்திரிகைச் செய்திகள், புலி இயக்கம், விதாசார பிரதிநிதித்துவம் ஆகியவைபற்றி விளக்கம் அளித்தார்,

கே:— அண்மைக்காலங்களில் 'பங்களாதேஷ்' ஒன்றைத்தவிர—வெளிநாட்டுதவிகள்— குறிப்பாக வெளிநாட்டு இராணுவ உதவிகளின்றி எந்தப்பிரிவினைஇயக்கமும் முன்னேறியதாக எனக்குத் தெரிய வில்லை;— உதாரணமாக— மேற்கு சஹாராவிலுள்ள'பொலிசாரியோ'' இயக்கத்துக்கு அல்ஜீரியா உதவுகிறது; சுலுமின்டானோ முஸ்லிம்களை லிபியா ஆதரிக்கிறது; ஈரிட்டேரியன்களை சூடானும் எகிப்தும் ஆதரிக்கின்றன; இந்த நிலையில் உங்கள்இலட்சியமான தனிநாட்டை உங்கள் பாதையிற் சென்று அடைய முடியுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா?

அமிர்:— இந்திய உதவி கிடைக்காவிடின் பங்களாதேஷ் சுதந்திரமடைந்திருக்கமுடியாது இதிலே ஐயமில்லை ஆனால், சிங்கப்பூர் எந்த விதயுத்தமுமின்றி சுதந்திரம் பெற்றதென்பதை மறக்கவேண்டாம். யுத்தம் நடத்தாமல், பேச்சுவார்த்தை மூலமே எத்தனையோ சின்ன நாடுகள் நாள்தோறும் சுதந்திரமடைந்து வருகின்றன. நாட்டின் அரசியல் சூழ்நிலையையும், ஆளுவோர், ஆளப்படுவோர் ஆகிய இருபகுதியினரது. பலத்தையும் பொறுத்தே இது இருக்கிறது.

இத்தனைக்கும் சிறீலங்கா ஒரு பலம் பொருந்திய ஒரு சாம்ராச்சியம் அல்ல; தமிழ் மக்களின் ஒன்றுபட்ட போராட்டத்துக்கு எதிராக அவர்களால் தாக்குப்பிடிக்க முடியாது. நான் அப்படித்தான் நினைக்கிறேன். நீங்கள் சிறுபான்மையினராக இருந்தபோதிலும், அரசாங்கம் சக்திவாய்ந்ததாக இல்லை; அதற்குஅதன்சொந்தப் பிரச்சினைகள் ஏராளம் உண்டு. எனவேஅவர்களால் எங்களை நீண்ட காலத்திற்கு அடக்கியாள முடியாது. இப்படித்தான் நான் கருதுகிறேன்.

கே:— ஆயுதப்போராட்டமின்றி பேச்சுவார்த்தை மூலம் உங்கள் இலட்சியத்தையடைய முடியுமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்!

அமிர்:— முதலில் நாம் இதைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கக்கூடிய சாத்தியக்கூறுகளை பயன்படுத்துவோம். அதுதோல்வியடைந்தால்—எமது விடுதலைக்காக சாத்தியமான ஒவ்வொரு வழியிலும் நாம் போராடுவோம். இறுதியாக குழம்பிய குட்டையில்மீன்பிடிக்க முயலும் வெளியார்களை இழுக்கக்கூடிய குழப்பம் நிறைந்த ஒரு பகுதியாகஅது மாறலாம். இதை உணர வேண்டியது அரசாங்கமே. அரசாங்கத்தின் நண்பர்களும் இதை அரசுக்கு உணர்த்தி புத்திபுகட்ட வேண்டும்.



கே:— பேச்சுவார்த்தைக்கு இன்னும் வழிதிறந்திருக்கிறதா?

அமிர்:— நாம் இனியும்பேச்சுவார்த்தை நடத்தி, எல்லைப்பிரச்சினையைத் தீர்த்துக் கொண்டு சமாதானமாகப் பிரிந்துபோக இடமுண்டு. இது அரசாங்கத்தைப் பொறுத்தது. நாம் எப்போதும் இணக்கப் பேச்சுக்குத்தயாராக உள்ளோம். கடந்த ஓராண்டாக, பிரதமரோ, ஜனாதிபதியோ என்னோடு பேச விரும்பியபோதெல்லாம் நான் சென்று பேசியிருக்கிறேன்.

கே:— சிறீலங்கா சுதந்திரக்கட்சியைவிட, இப்போதைய அரசாங்கம் தமிழருக்குக் கூடுதல் நன்மை செய்துள்ளதாக நீங்கள் கருதுகிறீர்களா?

அமிர்:— நான் அவ்வாறு நினைக்கவில்லை. சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் இணங்கியதால்தான் அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ள கொஞ்ச நஞ்ச உரிமைகளைக் கூட அவர்களால் தரமுடிந்தது. தெரிவுக்குழு முன்பு சிறீலங்கா சுதந்திரக்கட்சி சாட்சியமளித்தபோது, [illegible] கொண்ட அதே உரிமைகளையே அரசியலமைப்பில் தமிழ் மொழிக்கு அவர்கள் (அரசாங்கம்) அளித்திருக்கின்றனர். தெரிவுக்குழுவின் நடவடிக்கை குறிப்புக்களை பார்த்தால்— தெரிவுக்குழு முன்புசாட்சியமளித்த சிறீலங்கா சுதந்திரக் கட்சிக் குழுவினரிடம் இது பற்றிய கருத்துக் கோரப்பட்டு, அதற்கு அவர்கள் தமது சம்மதத்தைத் திட்டவட்டமாக தெரிவித்திருப்பதை நீங்கள் காணலாம்—அதன் காரணமாகவே இந்த மொழியுரிமைகளை அரசியலமைப்பில் அரசாங்கம் சேர்த்துள்ளது. இதற்குமேலாக அரசாங்கம் தமிழருக்கு எதுவும் செய்ததாகஎனக்குத்தெரியவில்லை.

கே: எனவே; உங்கள் நம்பிக்கைப்படி கடைசி வழியாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுவதானால், சில இளைஞர் இயக்கங்களின் கருத்துக்கும், உங்கள் கருத்துக்கும் அதிகவேறுபாடு இருக்கமாட்டாதல்லவா?

அமிர்: நான் ஆயுதப்போராட்டம் என்றுகூறவில்லை. 'போராட்டம்' என்றே கூறினேன். நான் மிகவும் எச்சரிக்கையாகவே இருக்கிறேன்.

கே: நீங்கள் ஆயுதப் போராட்டம் என்றே குறிப்பிட்டதாக பி. பி. ஸி. கூறியிருந்ததே!

அமிர்: இல்லை— அந்தச் சொல்லை அவர்கள் பாவித்திருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. நான் மிகுந்த எச்சரிக்கையுடனேயே கூறினேன். நான் கொழும்பு திரும்பியதும்நேராக சிறைச்சாலைக்கு செல்ல விரும்பவில்லை.

கே: ஆகவே நீங்கள் போராட்டமென்றே குறிப்பிட்டீர்கள்?

அமிர்: எல்லா வழிகளிலும். உலகிலுள்ள விடுதலை இயக்கங்கள் எல்லாம் இவ்வாறே செயற்படுகின்றன. முதல் பேச்சுவார்த்தை இரண்டாவது அமைதிவழிக் கிளர்ச்சி, இறுதியாக வேறு வழியான போராட்டங்கள்!

கே: ஆனால் அதுபற்றி விபரிக்கப்படமாட்டாது?

அமிர்: உரிய காலத்துக்கு முந்தியே நாம் அதை விபரிக்க முடியாது. நாம் முன்னேறும் போது, ஒவ்வொரு அடியையும் நன்கு ஆலோசித்தே எடுத்து வைப்போம்!

கே: நீங்கள் உங்கள் பாதையில் போதியளவு முன்னேறவில்லையென்றோ அல்லது துப்பரவாக முன்னேறவில்லையென்றோ நீங்கள் உணருகிறீர்களா?

அமிர்: கொஞ்சம் கூட அப்படியில்லை. மாறாக நிலைமை மோசமடைந்து வருகிறது. இலங்கைக்குள் வாழ்கின்ற தமிழ்பேசும் மக்கள் எதிர்நோக்கும் மிகப் பெரிய ஆபத்து, அவர்களுக்குச் சொந்தமான அவர்கள் தாயகம் அவர்களிடமிருந்து பறிக்கப்படுவதுதான், தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் பொதுவான தாயகமான கிழக்குமாகாணம் எம்மிடமிருந்து திட்டமிட்டு (சிங்களவர்களால்) பறிக்கப்படுகிறது.

கே: தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு எடுத்த முயற்சிகளை 'இந்து', 'ஸ்டேட்ஸ்மன்', 'டைம்ஸ் ஆப் இந்தியா' போன்ற பத்திரிகைகள் பாராட்டியுள்ளனவே...?

அமிர்: திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் அவரது அரசும் செய்த பிரசாரத்தை அவை அப்படியே விழுங்கியுள்ளன. ஆனால் அவர்களுக்கு உண்மை நிலையை எடுத்துக்கூறும்போது, அவர்கள் தமது தவறை உணருவார்கள்என்று நினைக்கிறேன்.

கே: உங்கள் பிரச்சினைகளையொட்டி தென்னிந்தியத் தமிழர்கள் இன்றைய நிலையில் எப்படி நடந்து கொள்வார்கள் என்றுநினைக்கிறீர்கள்?

அமிர்: அவர்கள் மிகவும் அனுதாபம் கொண்டுள்ளனர். 1977 ஆவணிக்கலவரத்தின்போது, அதற்கு ஆட்சேபம் தெரிவித்து, 50.000 பேருக்குமேற்பட்ட மக்கள் கலந்துகொண்ட ஊர்வலத்தைக் கருணாநிதி நடத்தினர். இனக்கொலையை நிறுத்தும்படி இலங்கையை இடித்துரைக்கும்படி மத்திய அரசை வற்புறுத்தும் தீர்மானத்தை தமிழ்நாடு சட்டசபையில் தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன் நிறைவேற்றினர்.

(நியூயார்க்கில் டெயிலி நியூஸ் நிருபர் ரி. எம். டீனுக்கு அளித்த பேட்டியிலிருந்து—நன்றி: டெயிலி நியூஸ்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதத்துளிகள்

★ வெளிநாட்டவர்கள் எமது இயக்கத்தைப் பொறுத்தே உதவுவர். யாம் எவ்வளவு தூரம் செயலாற்றுகின்ருேம் என்பதே முக்கியம். அழுதும் பிள்ளை அவளே பெற வேண்டும்.

★ எம்மிடம் திட்டம் இல்லையெனச் சிலர் கூறித் திரியலாம். அதற்காக யாம் எமது திட்டங்களை விளம்பரமாக அடித்து வீதி வீதியாக விநியோகிக்க முடியாது. தேவையான திட்டங்கள் அவ்வப்போது நடை முறைப் படுத்தப்படும்.

★ சிற்சில நெருக்கடியான காலகட்டங்களில் யாம் அவற்றிற்கேற்ப நடவடிக்கைகளை எடுக்க வேண்டி அமையலாம். அவற்றை மேலோட்டமாகப் பார்த்து விட்டு மக்கள் அவ நம்பிக்கைப் படுதலாகாது.

★ தமிழன் ஒவ்வொருவனும் தன்னைத்தான் மூளைசாலி என எண்ணுவதால் ஒற்றுமைப்படுவது கஷ்டமாக வுள்ளது. இவ்வாருன நிலைமையை மாற்றி ஒற்றுமைப் பட்டு விடுதலைக்குப் போராட வேண்டும்.

★ இலண்டனில் தமிழீழ விடுதலைக்கென ஏறத்தாழ பதினுறு குழுக்கள் இயங்குகின்றனவெனினும் அவற்றுள் ஒற்றுமையில்லை. அங்கு நின்ற போது அவர்களை ஓரளவு ஒற்றுமைப்படுத்தி வைத்துள்ளேன்.

★ தலைவர்கள் சிலர் கட்டுப்பாட்டை மீறுவதையும் அடிக்கடி தம்பாட்டில் அறிக்கைகள் விடுவதையும் அதனுல் ஏற்படும் பிரச்சினைகளையும் ஒத்துக்கொள்கின்றேன். விளக்கம் கேட்டு எழுதியுள்ளேன்; தவறு காணின் நடவடிக்கை எடுக்கப்படும்.

★ சுதந்திரத்திற்குக் குறுக்கு வழி கிடையாது—போராட்டம் மட்டுமே ஒரே வழி.

★ எந்த எதிர்ப்பையும் உடைத்தெறிந்து உலகில் முதல் தமிழ் இராச்சியம் 'தமிழீழம்' என்பதனை நிலை நாட்டியே தீருவோம். தமிழீழம் விரைவில் அமைந்தே தீரும்.

(—22-11-78ல் கொழும்பு ராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் த. வி. கூ. கொழும்புக் கிளைத்தலைவர் திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. அவர்கள் 'உலக அரங்கில் தமிழ் ஈழம்' எனும் தலைப்பில் உரையாற்றிய போது சிந்திய அரசியல் முத்துக்கள்—தொகுப்பு: க. இராசமனேகரன்.)

# திருமணமான தமிழ்ப் பெண்ணை 6 சிங்கள காடையர் கற்பழித்தனர்!

## சன்சோனி ஆணைக்குழுமுன் சாட்சியம்!

1977ம் ஆண்டு நடைபெற்ற சிங்கள வெறியாட்டத்தின்போது மலையகத்தைச் சேர்ந்த திருமதி செல்வராணி குழந்தைவேலு என்ற திருமணமான தமிழ்ப் பெண் ஆறு சிங்களக் காடையர்களினுல் அடுத்தடுத்து மிருகத்தனமாக கற்பழிக்கப்பட்ட சம்பவம் சன்சோனி ஆணைக்குழு முன் வந்திருக்கிறது.

கற்பழிக்கப்பட்ட குறித்த பெண்ணுன கஸ்நாவ தோட்டத்தைச் சேர்ந்த திருமதி செல்வராணி குழந்தைவேலு என்ற பெண்மணியே தமக்கு ஏற்பட்ட இக்குரூரத்தை கண் கலங்க சன்சோனி ஆணைக் குழுமுன் தெரிவித்துள்ளார்.

இப்போது கொழும்பில் நடைபெறும் சன்சோனி ஆணைக்குழுமுன் மேற்படி சாட்சியை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. இரா. பெரிசுந்தரம் நெறிப்படுத்தினுர்.

சிங்களக்காடையர் தனது வாயில் மண் அடைத்ததாகவும் அவர்களில்திலகரத்தினு என்பவன் தன்னை முதலில் கற்பழித்ததாகவும், தான் சத்தம் போட முயற்சிக்கவே கத்தியைக் காட்டிப் பயமுறுத்தி ஆரியவன்ச என்பவரும் அடுத்துவேறுநான்கு காடையரும் தன்னை அடுத்தடுத்து கற்பழித்ததும்தான் நினைவிழந்து விட்டதாகவும் சாட்சி கண்கலங்க தமது வெட்கத்தையும் விட்டு ஆணைக்குழுமுன் தெரிவித்தார்.

இதேபோல களனி பொல்லேகல என்ற இடத்தில் வசித்து வந்த திருமணமாகாத இளம்பெண்ணுன செல்வி. மனேன்மணி என்ற தமிழ்ப் பெண்ணும் இரு சிங்களக் காடையர்களால் தாம் கற்பழிக்கப்பட்ட சம்பவத்தை ஆணைக்குழு முன் எடுத்துக் கூறினுர். தம்மைக்கற்பழித்தவர்களில் ஒருவரானகுவின்டஸ் என்பவரைத்தாம் பின்னர் அடையாளம் காட்டியதாகவும். மற்ருெருவரான கிறிகோரிப்என்பவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதாகவும், பொலிசார் சந்தேக நபர்கள் மீதுஇதுவரை வழக்குத் தொடரவில்லையென்றும் சாட்சி தெரிவித்தார்.

சாட்சியின் இக்கற்பழிப்பு சம்பவம் பற்றி என்ன நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதென பேலியா கொடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை ஆணைக்குழுமுன் சாட்சியமளிக்க அழைக்கும்படி ஆணையாளர் உத்தரவிட்டார்.

# ஆதிக்கச் சிங்களத்தை எதிர்த்தே தீருவோம்

இணைப்பு மொழி என்ற போர்வையில் 1979 சனவரியிலிருந்து ஆதிக்க மொழியாகிய சிங்களம் தமிழ் மாணவர்களின் தொண்டைக்குள் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படவிருக்கிறது. அன்று மும்மொழித் திட்டம் அமுல்ப்படுத்தப்பட இருந்த வேளையிலே சிங்களத்துக்கு உள்ள அந்தஸ்த்து தமிழுக்கு இல்லை என்று கூச்சலிட்டோம். தமிழுக்கு சம அந்தஸ்து கொடுக்க வேண்டும் என்று அன்று கேட்டோம் இன்று பெயரளவில் தமிழுக்கு அந்தஸ்து கொடுத்திருக்கிருர்கள்.

இவ்வேளையிலே இணைப்பு மொழி என்ற போர்வையுடன் ஆதிக்க வெறிகொண்ட சிங்களம் தமிழ் மக்கள் மத்தியில் வருகிறது. இதற்காக அடுத்த ஆண்டு பாடத்திட்டத்தில் ஆரும் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை வாரத்துக்கு மூன்று வகுப்புகளும் ஒன்பதாம்பத்தாம்வகுப்புகளுக்கு வாரத்துக்கு இரண்டு வகுப்புக்களும் ஒதுக்கப்படலாம். இந்தப்பாட நேரங்களில் தமிழ்ப் பாடசாலைகளில்தமிழ்மாணவர்களுக்கு ஆதிக்க சிங்களம் ஒரு பாடமாக படிப்பிக்கப்படவிருக்கிறது.

அதேவேளையில் சிங்களப் பாடசாலைகளிலும் தமிழ் ஒருபாடமாகப் படிப்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டாலும், தமிழ்படிக்கவேண்டிய சட்டரீதியான தேவையோ இன்றிமையாமையோ எதுவும் இல்லாத காரணத்தினுல் அது பிசுபிசுத்து விடுமென்றும் தமிழைப் படிக்க சிங்கள மாணவர்கள் முன்வரப் போவதில்லை. யென்றும் கூறப்படுகிறது. சிங்களவர்களும் தமிழ் படிப்பதாக போலி மயக்கத்தை ஏற்படுத்தி இணைப்பு மொழி என்ற போர்வையில் தமிழ் மாணவர்களில் தொண்டைக்குள் புலவந்தமாக ஆதிக்க சிங்களத்தைதிணிப்பதே சிங்கள ஆட்சியாளரின் சதித்திட்டம் ஆகும். ஆதிக்கச் சிங்களம் எந்த வகையில் வந்தாலும் அதைத்தமிழ் மாணவகுலம் ஏற்காது எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தும்

—வி. விஜயகுமார்,
தென்புலோலியூர்.

# "இந்துமத பாடத்தை சிங்களத்தில் தமிழ் மாணவர்கள் எழுதுகிருர்களே!"

## இனம் அழிக்கப்படுவது குறித்து ஈழவேந்தன் கவலை

அண்மையில் புவக்பிற்றியாவில் டாக்டர் சிறீஸ் கந்தராஜா அவர்கள் இல்லத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கருத்தரங்கு ஒன்று அவரது தலைமையில் நடைபெற்றது.

டாக்டர் சிறீஸ்கந்தராஜா அவர்கள் தனதுதலைமையுரையில்மலையகத்தமிழ் மக்களுக்குப் புவக்பிட்டியாவில் வாழ்பவர் உட்பட தமிழர்களாகவும், தற்பாதுகாப்புடனும் இப்பகுதியில் வாழ முடியாதநிலை உருவாகி உள்ளது. 1958 இனக்கலவரமும் 77 இனக்கலவரமும் எம் நிலைமையை பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டியுள்ளது. நான் ஏற்கனவே திருமலை, மன்னுர், வவுனியா போன்ற பகுதிகளில் மேற்குறித்த மக்கள் குடியேற உதவிசெய்துள்ளேன். அவர்கள் வட கிழக்கில் மகிழ்ச்சியோடு வாழ்வதாக தனக்குக் கடிதம் எழுதியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்புக் கிளைத் தலைவர் ஈழவேந்தன் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:—

இன்று நாட்டில் உருவாகி வருகின்ற அரசியல் சூழ்நிலையில் இலங்கையில் தென்பகுதியிலோ அல்லது மலையத்திலோ தொடர்ந்து வாழ முயலும் மலையகத் தமிழ்மக்கள் தமது மொழி, நாகரிகம் பண்பாடு, வாழ்வு என்பன அனைத்தையும் இழக்கவேண்டிய நிலைக்கு ஆளாக நேரிடும். இன்று சிங்கள பகுதி பலவற்றில் தமிழ் பள்ளிக்கூடங்களுக்கு மூடுவிழா நடாத்தப்படும் சூழ்நிலையில் தமிழ் பிள்ளைகள் ஆயிரக் கணக்கில் சிங்களத்தை பயிற்சி மொழியாக ஏற்று சிங்களவராகமாறுகின்றபெரும் பேராபத்து உருவாகி உள்ளது.

அண்மையில் நடைபெற இருக்கும் ஜி.சி.ஈ. தேர்வில் இந்துமத பாடத்தை எம் தமிழ் மாணவர்கள் ஆயிரக் கணக்கில்சிங்களத்தில்எழுத இருக்கிருர்கள் என்று எமக்குக் கிடைத்துள்ள செய்தியும், சில காலததுக்கு முன்பு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தன்தொழிற்சங்க வரலாற்றை ஒட்டி நடாத்தியகட்டுரைப்போட்டியில் பங்கு கொண்ட 25 மாணவிகளில்20 பேர் சிங்களத்திலே கட்டுரை வரைந்துள்ளனர் என்று எமக்குக் கிடைத்துள்ள செய்தியும் எமது இனத்தின் தனித்துவம் விரைந்து அழிந்து வருவதனை எடுத்துக் காட்டுகின்றது."

செல்வி மகேஸ்வரி வேலாயுதம்

இவ்வுரையினை அடுத்து தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக் கிளை சார்பில் உரைநிகழ்த்திய செல்வி. மகேஸ்வரி வேலாயுதம் (எல்.எல்.வி) அவர்கள் பின்வருமாறு கூறினுர்.

சொந்த வீட்டைப்போல நாட்டைக் காக்கஒவ்வொரு தமிழனும் வீறுகொள்ள வேண்டும். அடக்குமுறைக்கு அடங்காத இனம்தான் தன்னைத்தான் ஆளவல்லது. விடுதலைப் பிறரிடமிருந்து வருவது என்ற எண்ணம் உள்ள வரை தமிழர்தனியரசுபுரியும்வாய்ப்பு இல்லை. எனவே, நம் நாடு விடுதலை பெறுவதற்காக நாம் முயற்சி எடுக்க வேண்டும். அடிமைத் தனம் தொடர்ந்து நீடிப்பதைப் பார்த்துக்கொண்டு நாம் சும்மா இருக்கக் கூடாது. எமக்கு என்ன என்று கூறும் சுயநலமிகளாலும், எம்மால் [illegible] களாலும் தமிழர்சமுதாயம் கேவலம் அடிமை நிலையில் சிக்குண்டு தவிக்கிறது. அடிமைத் தளையை உடைத்து எறிவதற்கு தமிழ் ஈழத்தை திரும்பப் பெறுவதற்கு தியாக மூர்த்திகள் வேண்டும். பொருளை மதியாதபுனிதர்கள் வேண்டும். எனவே இலங்கை வாழ் தமிழ்மக்கள் அனைவரும் மலையகத் தான், மட்டக்களப்பான், மன்னுரான், யாழ்ப்பாணத்தான் என்ற வேறுபாடு இன்றி தமிழர் என்ற இன உணர்ச்சியோடு தோளொடு தோள் நின்று தமிழ்மண்ணைக்காக்க முன்வர வேண்டும் என்று கேட்கின்றேன்.

அண்மையில் பாராளுமன்றத்தில் சிங்கள அங்கத்தவர். ஒருவர் கூறியிருந்தார்'' சிங்களவர்களுக்கு உடம்பில் சிங்கள இரத்தம் ஓடும் வரை தமிழ் ஈழம் கிடைக்கமாட்டாது என்று நான் அதே அங்கத்தவருக்குக் கூறுகின்றேன். இலங்கை தமிழனுக்கு தமிழ் இரத்தம் ஓடுகின்றதாய் இருந்தால் தன்மானத் தமிழன் தமிழ் ஈழம் அமைத்தே தீருவான். தமிழ் இரத்தம் தமிழனுக்கு ஒடிக் கொண்டு இருப்பதால் நிச்சயம் தமிழ்ஈழம்கிடைத்தேயாகும். அமைத்தே தீருவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் கண்ணீரில் அரசியல் இலாபம் தேட முயற்சிப்பவர்கள் யார்?

அன்பு நண்பா,

தென் தமிழ் ஈழமாம் கிழக்குமாணத்தில் இயற்கைத் தெய்வம் ஆடிமுடித்த ஊழிக்கூத்தின் விளைவாகக் கொடூரமாகப் பாதிக்கப்பட்டு— பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பயங்கரமாகப் பலிகொடுத்து—வீடு வாசல்களை, மாடுமனைகளை இழந்து—நிர்க்கதியாக்கப்பட்டு, எதிர்காலமே கேள்விக்குறியான நிலையில், அழுதழுது கண்ணீரும் வற்றிவிட்ட நிலையில்—பஞ்சைகளாய், பராரிகளாய்த்தவித்து நிற்கும் பல்லாயிரம் குடும்பங்களுக்கு கைகொடுத்து உதவிட—அவர்தம் மறுவாழ்வுக்கு ஏதோ ஒரு வகையிலேனும் உதவிபுரிந்திட—மனித உணர்வுபடைத்த ஒவ்வொருவருமே முன்வந்து கொண்டிருக்கும்நேரம்இது! சாதி, மத, பிரதேச, அரசியல் நோக்கின்றி, துன்பத்தில் சாகும் சொந்தச்சகோதரர்களின் துயர்துடைத்திட தமிழ்சமுதாயம் தன்னாலானதைச் செய்திட முன்றிற்கும் வேளை இது!

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவை, தமிழ் அகதிகள் மறுவாழ்வுக்கழகம் மற்றும் வேறு பல சமூக சமய நிறுவனங்கள் இந்தத் துயர் துடைக்கும் பணியிலே தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளன. தமிழர் விடுதலைக் கூட்டணி பா.உக்கள் கிழக்கு மாகாணத்தில் தங்கிநின்று நிவாரணப்பணிகளை கவனித்துக் கொண்டுவருகிருர்கள். எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் அடிக்கடி மட்டக்களப்புக்குச் சென்று புனர்வாழ்வுப்பணியிலே இருக்கின்ற சீர்கேடுகளை ஆட்சியாளரின்கவனத்துக்குக் கொண்டுவந்து ஆவனசெய்துவருகிருர்

கிழக்குமாகாணத் தமிழ்ச் சகோதரர்கள் சூருவளியின் கொடுமைக்கு ஆளாகினர் என்ற செய்திவந்ததும்—தமிழ் இளைஞர் பேரவையின் செயல் வீரர்கள்தாம் தடைகள் பலவற்றையும் தாண்டிக் கொண்டு அங்கு ஓடோடிச் சென்று அங்கு துன்புறும் மக்களின் துயர் துடைக்கும் பணியிலே உடனடியாக ஈடுபட்டனர் என்பதை மட்டக்களப்புத் தமிழ் பேசும் மக்கள் மறந்துவிட மாட்டார்கள். எந்தவித அரசியல், சாதி, மத பேதமின்றி தமிழ் இளைஞர்கள் இந்தப் பணியைத் தொய்பாமல் துவளாமல் ஆற்றிவருகின்றனர்.

இந்த நிலையிலேதான் 16.12.78 வீரகேசரி ஏட்டில்'' மக்களின் கண்ணீரில் அரசியல் லாபம் தேடவேண்டாம்'' என்று தமிழர்விடுதலைக் கூட்டணிக்கு நீதியமைச்சர் திரு. தேவநாயகம் ''வேண்டுகோள்'' விடுத்திருக்கிருர்.

வெளியூர்களிலிருந்து—குறிப்பாக வடமாகாணத்திலிருந்து —தமிழ்த் தொண்டர்கள் கிழக்கே செல்வதும்—அங்குள்ள மக்களோடு இரண்டறப் பழகிச் சகோதர வாஞ்சையுடன் அவர்களுக்கு சேவை புரிவதும்—இதன்காரணமாக பிரதேச வேறுபாடுகள் வெடிவைத்துத் தகர்க்கப்படுவதும்—தமிழ் சமுதாய ஒற்றுமை வலுவடைவதும்—அங்குள்ள தேவநாயகம் கும்பலுக்கு அடிவயிற்றைக் கலக்கி வருவதை நாம் அறிவோம்! யாழ்ப்பாணம் —மட்டக்களப்பு என்ற பிரதேச வேறுபாட்டையே தமது அரசியலின் அடித்தளமாகக் கொண்ட சுயநலவாதிகள், தமது அடிப்படையே ஆட்டம் காணும் போதுசகித்துகொண்டுஇருப்பார்களா என்ன

''அயலான் கண்ணிலுள்ள துரும்பை அகற்றுவதற்கு முன். முதலில் உனது கண்ணிலுள்ள உத்திரத்தை அகற்றிவிடு'' என்ற யேசுநாதரின் வார்த்தைகளையே அமைச்சர் தேவநாயகத்துக்கு நினைவூட்ட விரும்புகிறேன்—

கிழக்கு மாகாண மக்களின் கண்ணீரில்—''அரசியல் இலாபம்'' தேடுவதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கே செல்ல வில்லை; மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்கே அங்கே செல்கிறது; கூட்டணி அங்கே செல்வது மக்களின் கண்ணீரில் திரு. தேவநாயகம் சம்பாதிக்க விரும்பும் ''அரசியல் இலாபத்துக்கு'' இடையூருக இருக்குமாளுல் அதற்கு நாம் எதுவும் செய்ய முடியாது.

தமிழர் விடுதலைக்கூட்டணி ஏதோ இப்போதுதான் புதிதாகக் கிழக்கு மாகாணத்துக்கு சென்றுள்ள ஓர் 'திடீர்' இயக்கம் அல்ல; கடந்த முப்பது ஆண்டுகளாக—தமிழரசுக் கட்சியாக—தந்தை செல்வா, அமரர் வன்னியசிங்கம் போன்ற பெருந்தலைவர்களின் புனித வழியிலே கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களுடன் இரண்டறக் கலந்திருக்கும் ஓர் இயக்கம்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி. இன்னும் சொல்லப்போளுல் — திரு. தேவநாயகத்தை அறிவதற்கு முன்பே தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் அவர்களை நன்கு தெரிந்து கொண்டிருப்பவர்கள்—புரிந்து கொண்டிருப்பவர்கள் — கிழக்கு மாகாண மக்கள்; திரு. தேவநாயகம் பொதுச் சேவைக்கு வருவதற்கு முன்னரே. மக்களின் நல்வாழ்வுக்கு தம்மை அர்ப்பணித்துவிட்ட தலைவர்கள் கூட்டணியிலிருக்கிருர்கள்!

1957ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் மிகப் பெரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, மக்கள் துடிதுடித்தபோது—திரு. தேவநாயகம் எங்கிருந்தாரோ தெரியாது—கிழக்கு மாகாண மக்களின் துயர்துடைக்கும் பணியிலே முதலாவது ஆளாக அங்கு நின்றவர் அமரர் வன்னிய சிங்கமே என்பதை எவரும் மறுத்திட முடியாது.

''இலங்கை முழுவதும் ஒரேநாடு — எல்லோருக்கும் எங்கும் வாழ உரிமையுண்டு'' என்கிருர் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன; ஆனுல் அவரது தொண்டரடிப் பொடியான திரு. தேவநாயகத்தின் துணைவியாரோ 'யாழ்ப்பாணத்தார்' மட்டக்களப்புக்கு வரவேண்டியதில்லையென்கிருர்: திரு. தேவநாயகமோ கூட்டணித் தலைவர்கள் ''எங்கிருந்தோ'' வந்து தமக்கு ஆலோசனை கூறத்தேவையில்லை என்று அறிக்கை விடுக்கிருர்! இதிலிருந்தே யார் மக்களின் கண்ணீரில் அரசியல் லாபம் பெறத் துடிப்பவர்கள்—யார் ஆடிக்காற்ருேடு அள்ளுண்டு வந்த அரசியல் தலைமை அழியாது பாதுகாத்திடத் துடிப்பவர்கள் என்பது புரிகிறதல்லவா?

எதை ''அரசியல் லாபம்''தேடும் முயற்சி என்கிருர் தேவநாயகம்? கல்குடாத்தொகுதியில் கூட்டணியை ஆதரித்த மக்களுக்கு நிவாரண உதவிகள் எதுவும் கிடைக்கவில்லையென்றும் தாம் அரசியல் ரீதியாகப் பழிவாங்கப்படுவதாகவும் அங்குள்ளோர் புகார் செய்கிருர்களே — இதுபடுகேவலமான அரசியல் ஆகாதா? மக்களின் கண்ணீரில் அரசியல் வளர்ப்பதாகாதா?

பட்டிருப்புத்தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணித் தொகுதி என்பதற்காக அத்தொகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கவில்லையென்ருல்— அதைத்தட்டிக் கேட்கத்தானே வேண்டும்? அப்படித் தட்டிக்கேட்பது அரசியலா அல்லது அரசியலுக்காக அத்தொகுதியைப் புறக்கணிப்பதுகேவலமான அரசியலா?

பொலன்னறுவை, அம்பாறை போன்ற இடங்களை விட அதிகமாகவும் மோசமாகவும் பாதிக்கப்பட்டஇடம் மட்டக்களப்பு: எனவே வெளிநாட்டு உதவிகளில் பெருமளவு மட்டக்களப்புக்கே செலவிடப்பட வேண்டுமென்று கோருவது 'அரசியல்லாபம்'தேடுகின்ற முயற்சியா?

அம்பாறைக்கும், பொலனறுவைக்கும் செல்லுகின்ற உதவிகளில் அரைவாசிகூட மட்டக்களப்பு மக்களுக்கு கிடைக்கவில்லையென்பதைச் சுட்டிக்காட்டி அரசாங்கத்திடமிருந்து உதவியை பெற்றுக்கொடுக்க முயற்சிப்பது அரசியல்'லாபம்' தேடும் முயற்சியா?

இவைகள் ''அரசியல் லாபம்'' தேடும் முயற்சியென்று திரு. தேவநாயகத்திளுல் முத்திரை குத்தப்பட்டாலும்கூட — அதற்கு பயந்து கிழக்குமாகாண மக்களுக்கு செய்ய வேண்டிய பணியை செய்யாமல் கூட்டணி இருந்திட முடியாது.

அமைச்சர் தேவநாயகம் கூறியிருப்பது போல கூட்டணி 'எங்கிருந்தோ' வந்தது அல்ல; கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களின் இதயங்களில் கடந்த முப்பது ஆண்டு காலமாக இரண்டறக்கலந்திருக்கும் இயக்கம் அது; அவர்களது வாழ்விலும், தாழ்விலும் பின்னிப் பிணைந்து ஒன்றிணைந்து நிற்பது; அவர்களுடைய இயக்கமாக அவர்களாலே கூட்டணி வளர்க்கப்பட்டதே தவிர-யாராலும் அவர்கள் மீது திணிக்கப்பட்டதல்ல; இதை திரு. தேவநாயகம் உணர வேண்டும்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், பிரேமதாசாவும், ஏனைய அமைச்சர்களும் மட்டக்களப்புக்கு வரலாமென்ருல் மட்டக்களப்பு மக்களுக்கு முப்பதாண்டுகளாக பரிச்சயமானவர்களான எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கமும், சிவசிதம்பரமும் ஏன் அங்கு வரக்கூடாது? அப்படி வரக்கூடாது என்று தடைபோடயாருக்கும் உரிமை கிடையாது.

எனவே நீதியமைச்சர் திரு. தேவநாயகம் வீண் குரோதங்களை விடுத்து-கிழக்கு மாகாண மக்களுக்கு வேண்டிய நிவாரணங்களைப்பெற துணிச்சலுடன் அரசோடுவாதாடட்டும்; தலைவர் அமிர்தலிங்கம் கூறியிருப்பதுபோல, தமிழர் விடுதலைக் கூட்டணியும் இதற்கு துணை நிற்கும்.

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

---

## அப்படிச் சொன்னவர் அம்மாதான் ஐயா அல்ல

அண்மையில் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் மட்டக்களப்புக்குச் சென்றிருந்த போது, அவரிடம் ''யாழ்ப்பாணத்து ஆட்கள் எமக்குத் தேவையில்லை'' என்றுகூறியவர் நீதியமைச்சர் தேவநாயகத்தின் பாரியார் திருமதி தேவநாயகம்தான்; திரு. தேவநாயகம் அல்ல; அப்போது திருமதி தேவநாயகத்தைப் பார்த்துத் தான் திரு. அமிர்தலிங்கம் ''அப்படியாளுல் அம்மணீ, நீங்கள்தான் முதலில்யாழ்ப்பாணம் போகவேண்டிவரும்'' என்று கூறிஞர். திருமதி தேவநாயகத்தை திரு. தேவநாயகம் என்று சென்ற 13-12-78 இதழில் தவருகக் குறிப்பிட்டிருந்த செய்தியை இதன்மூலம் சுதந்திரன் திருத்திக்கொள்கிறது.

1-ம் பக்கத் தொடர்

வசாவிளானில் நடைபெற்ற இராணுவத்தினரின் அராஜகச் செயல்களால் ஒரு இலட்சம்வரை சேதமேற்பட்டிருப்பதாக 17-12-78 காலையில் ஸ்தலத்திற்குசென்று நிலைமைகளைப் பார்வையிட்ட கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை மதிப்பிட்டார். இவ் விஷயங்களை அவர் உடனடியாக ஜனுதிபதிக்கும், காங்கேசன்துறை பா. உ. திரு. அமிர்தலிங்கத்துக்கும், இராணுவத் தளபதிக்கும் அறிவித்துள்ளார்.

திரு. வெ. யோகேஸ்வரன் பா. உ. திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. ஆகியோரும் சம்பவம் நடைபெற்றஇடத்தை நேரடியாகப் பார்வையிட்டனர்.

யாழ்ப்பாணத்திலும் பல கடைகளில் இராணுவத்தினர் 'ஓசியில்' சிகரெட்டும் மற்றும் பொருட்களும் 'கப்பம்' போல கேட்டுத் தொல்லை கொடுப்பதாக வியாபாரிகள் புகார் செய்கின்றனர்.

யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள நியூ அலியா ஹோட்டல், [illegible] ஆகிய கடைகளிலும் சாப்பிட்டுவிட்டும், சிகரெட் வாங்கிக்கொண்டும் இராணுவத்தினர் பணம் கொடுக்கமறுத்துவிட்டதாக குறித்த கடைக்காரர்கள் புகார்செய்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது சிவில் ஆட்சியா அல்லது யாழ்ப்பாணமாவட்டத்தின் ஆட்சிப்பொறுப்பு இராணுவத்திடம்ஒப்படைக்கப்பட்டுவிட்டதா என்று மக்கள் சந்தேகிக்கின்றனர். பொலிசாரின் துன்புறுத்தலைத் தொடர்ந்து இப்போது இராணுவவெறியாட்டம் உச்சக்கட்டத்தையடைந்துள்ளது.

### கூட்டணி அலுவலக வாராந்தக் கருத்தரங்கு

நாள்:— 23.12.78 சனிக்கிழமை மாலை 6 மணி.

இடம்: த.வி.கூ. தலைமைச் செயலகம் யாழ்ப்பாணம்.

பொருள்:— ''இன, மொழிச் சமத்துவமற்ற நிலையில் இணைப்பு மொழியின் ஆபத்து''

பேசுவோர்: கூட்டணிப்பிரமுகர்கள்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org